பக்கங்கள்:-17

# காலை முரசு

| முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | மாசி 19 | திங்கட்கிழமை | 03.03.2025 | அதிர்வு 211 |
|---|---|---|---|---|---|

## சி.வி.கே. அனுப்பிய கடிதம் இதுவரை கிடைக்கவில்லை

### இப்படி சுரேஷ் தெரிவிப்பு



இலங்கைத் தமிழ ரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவ ஞானத்தால் அனுப்பப் பட்டதாகக் 06






# ‘அதானி’ வெளியேற்றம் இலங்கைக்குப் பேராபத்து!

## இந்தியாவைக் கடந்து வெளிநாட்டு முதலீடு இங்கு வராது என்றும் மனோ சுட்டிக்காட்டு

இந்தியாவைக் கடந்து இலங் கைக்கு வெளிநாட்டு முதலீடு வராது என்றும், அதானி வெளியேற்றம் பெரும் பிழை என்றும் தமிழ் முற் போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் தனது எக்ஸ் தளத்தில் மனோ எம்.பி. மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:- 06

# தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் இணைந்து தேர்தலை எப்படி எதிர்கொள்வது என்பது குறித்து தமிழரசு பேச்சு

## மன்னாரில் சுமந்திரன் தெரிவிப்பு






(எஸ்.ஆர்.லெம்பேட்)

வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலைத் தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் இணைந்து எவ்வாறு எதிர்கொள்வது தொடர்பிலும், தேர் தலுக்குப் பின்னர் ஆட்சி நிர்வாகங்களை இணைந்து அமைப்பது குறித்தும் கலந்து ரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று இலங்கைத் தமிழரசுக் 06



மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஏற்பட்ட நீதியரசர் வெற்றிடங்களை அந்த வெற்றிடங் கள் ஏற்பட்ட சமயங்களில் நிரப்பாமல் இழுத் தடித்தமை காரணமாக அந்தப் பதவிகளுக்கு நியமிக்கப்படும் தகுதியுடன் சிரேஷ்ட நிலையில் இருந்த மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாச கர் இளஞ்செழியன் அந்தப் பதவி உயர்வைப் பெறாமலேயே 61 வயதில் ஓய்வு பெறும் துர திஷ்டம் நேர்ந்தமை தெரிந்த விடயம்தான்.

உரிய காலத்தில் அந்தப் பதவி உயர்வை அவர் பெற்றிருந்தால் மேலும் இரண்டு வருடங்கள் (63 வயது வரை) மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும், தொடர்ந்து பதவி உயர்வு கிடைத்திருந்தால் உயர் நீதிமன்றத்தில் அடுத்து இரண்டு, மூன்று வருடங் களும் (65 வயது வரை) அவர் பணியாற்றி இருக்க முடியும்.

மேல் நீதிமன்ற நீதிபதிகள் வரிசையில் சிரேஷ்ட – முதல் – நிலையில் அவர் இருந்த சமயத்தில் நிலவிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் பதவி வெற்றிடங்களை நிரப்பும் 06

# கீத் நொயர் கடத்தப்பட்ட சம்பவம் குறித்து கைதான முன்னாள் புலனாய்வாளர்கள் இருவருக்கும் பிணை

சிரேஷ்ட ஊடகவியலாளர் கீத் நொயர் கடத்தப்பட்டு தாக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட இராணுவப் புலனாய்வாளர்கள் இருவருக்கும் பிணை வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 2008 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி தெஹிவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வைத்தியா வீதிப் பகுதியில் வைத்து சிரேஷ்ட ஊடகவியலாளர் கீத் நொயர் வானில் கடத்தப்பட்டு கொடூரமாகத் தாக்கப்பட்ட நிலையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவத்துடத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் நவகத்தேகம மற்றும் எலயபத்துவ பொலிஸ் பிரிவுகளில் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 42 மற்றும் 46 வயதுடைய நவகத்தேகம மற்றும் உலுக்குளம பகுதிகளைச் சேர்ந்த முன்னாள் இராணுவப் புலனாய்வாளர்கள் ஆவர்.

சந்தேகநபர்கள் நேற்று கல்கிஸை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போது, சந்தேகநபர்கள் இருவரையும் 10 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி



மஹிந்த ராஜபக்ஷவிடம் 2018ஆம் ஆண்டு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் வாக்குமூலம் பதிவு செய்திருந்தனர்.

அத்துடன் இந்தச் சம்பவம் தொடர்பில் 2017ஆம் ஆண்டு இராணுவப் புலனாய்வுப் பிரிவின் 5 பேர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சில மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கை மேலும் நீடிப்பு



நாட்டின் சில மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கைகள் மேலும் நீட்டிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, நுவரெலியா மற்றும் பதுளை மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு முன்னெச்சரிக்கை மேலும் நீட்டிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கிப்பட்டுள்ளது.

இதற்கிடையில், தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக, பல முக்கிய நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

அதன்படி, இராஜாங்கனை நீர்த்தேக்கத்தின் இரண்டு வான்கதவுகள் இரண்டு அடிகள் திறக்கப்பட்டுள்ளன என நீர்த்தேக்கத்திற்கு பொறுப்பான பொறியியலாளர்கள் தெரிவித்தனர்.

மேலும், மெதிரிகிரியவில் உள்ள கவுடுல்ல நீர்த்தேக்கத்தின் இரண்டு வான் கதவுகளும் தலா 9 அங்குலம் திறக்கப்பட்டுள்ளதுடன், வினாடிக்கு 500 கனவளவு நீர் கவுடுல்ல ஓயாவிற்கு திறந்துவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மத மற்றும் கலாசார மறுமலர்ச்சியை உருவாக்க தலதா உற்சவத்தைப் பயன்படுத்த வேண்டும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் வேண்டுகோளின் பேரில், ஏப்ரல் 18 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை பொதுமக்களுக்கான விசேட தலதா கண்காட்சியொன்றை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, ஏப்ரல் 18 ஆம் திகதி பிற்பகல் 3:00 மணி முதல் மாலை 5:30 வரையிலும், 19 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை நண்பகல் 12:00 மணி முதல் மாலை 5:30 வரையிலும் தலதா கண்காட்சி நடைபெற உள்ளது.

இது தொடர்பான பூர்வாங்கக் கலந்துரையாடல் நேற்று கண்டியில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நடைபெற்றது.

16 வருடங்களுக்குப் பிறகு நாட்டின் பௌத்த மக்களுக்கு இந்த வாய்ப்பை வழங்கிய மகாநாயக்க தேரர்களுக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி, தங்கள் வாழ்வில் எப்போதாவது ஒரு நாள் தலதா மாளிகையை வழிபட வேண்டும் என்பது இந்த நாட்டின் பௌத்த மக்களின் எதிர்பார்ப்பாகும் என்று தெரிவித்தார்.

நாட்டில் இழந்து வரும் நாகரீகத்தை மீட்டெடுக்கவும், மத மற்றும் கலாசார மறுமலர்ச்சியை உருவாக்கவும் இந்த வாய்ப்பு உதவும் என்று எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி நம்பிக்கை தெரிவித்தார்.

எந்தவித தடைகளும் அல்லது இடையூறுகளும் இல்லாமல் தலதா ஆண்டகையை வழிபடும் வாய்ப்பை அவர்களுக்கு வழங்குவது அனைவரின் பொறுப்பு என்றும் இதற்காக அரசாங்கம் உச்ச பங்களிப்பையும் தலையீட்டையும் வழங்கும் எனவும் தெரிவித்தார்.



தலதா கண்காட்சி நடைபெறும் காலகட்டத்தில் கண்டி பகுதியில் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கவும், மாணவர்களின் கல்விக்காக வேறு நாள்களில் பாடசாலைகளை நடத்தவும் பரிந்துரை செய்யப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலின் போது, தலதா மாளிகையை வழிபட வரும் பக்தர்களின் சுகாதார வசதிகள் மற்றும் கழிவு முகாமைத்துவம் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டதோடு அந்தக் காலகட்டத்தில் போக்குவரத்துத் திட்டத்தை செயல்படுத்தவும் திட்டங்கள் வகுக்கப்பட்டன.


















# உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திகதி இவ்வார இறுதிக்குள் அறிவிக்கப்படும்



உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கான திகதி இவ்வார இறுதிக்குள் அறிவிக்கப்படும் எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை மிக விரைவில் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க அண்மையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

அத்தோடு 2023 ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்காக செலுத்தப்பட்ட கட்டுப்பணத்தை விரைவில் திருப்பிச் செலுத்த நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட துணை மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளர்களுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

# நீர்கொழும்பில் 10 கோடி ரூபா பெறுமதிமிக்க போதைமாத்திரைகளுடன் ஒருவர் சிக்கினார்

நீர்கொழும்பு பகுதியில் 10 கோடி ரூபா பெறுமதி மிக்க போதைமாத்திரைகளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

நீர்கொழும்பு, கொப்பரா சந்திக்கருகில், கொழும்பு குற்றப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய நேற்று ஞாயிற்றுக்கிழமை விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது சந்தேகத்துக்கிடமான வான் ஒன்றைச் சோதனையிட்டபோது அதிலிருந்து பெருமளவான போதைமாத்திரைகள் கைப்பற்றப்பட்டன.



சந்கேநபர் 5 இலட்சம் போதைமாத்திரைகளை வானில் கடத்திக் கொண்டு சென்றதுடன் அதன் சந்தைப் பெறுமதி சுமார் 10 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டது.

சம்பவம் தொடர்பில் வா சாரதி கைது செய்யப்பட்டதுடன், கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட கையடக்க தொலைபேசி மற்றும் வான் ஆகியன பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டன.

இதேவேளை, குறித்த போதை மாத்திரைகள் இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன என்று சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

மேலும் இந்தச் சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.










# இராணுவத்தினரால் இத்தாவில் பகுதியில் 40 குடும்பங்களுக்கு உதவி வழங்கல்

கிளிநொச்சி பளை, இத்தாவில் பகுதியில் 40 குடும்பங்களுக்கு இலங்கை இராணுவத்தினரால் மெத்தைகள், தென்னங்கன்றுகள் நேற்று வழங்கிவைக்கப்பட்டன

இலங்கை இராணுவத்தின் 52 ஆவது படைப்பிரிவுக்குட்பட்ட 23 புநஅரரெ றயவஉா படைப்பிரிவின் ஒழுங்கு படுத்தலில் இந்த உதவித் திட்ட  நிகழ்வு இத்தாவில் கிளிஃவேம்போடுகேணி சி.சி.த.க வித்தியாலயத்தில் நேற்று இடம்பெற்றது.

முகமாலை,கிளாலி,வேம்போடுகேணி, இத்தாவில் பகுதிகளை சேர்ந்த நலிவுற்ற 40 குடும்பங்களுக்கே இவ்வாறு மெத்தை மற்றும் தென்னங்கன்றுகள் வழங்கிவைக்கப்பட்டன

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக 52 ஆவது படைப்பிரிவின் தளபதி மேஜர் ஜென்ரல் வி.டி.எஸ். பெரேரா கலந்து கொண்டார்.

அத்துடன். வேம்போடுகேணி சி.சி.த.க வித்தியாலய அதிபர், அருட்தந்தை, கிராம அலுவலர்கள், ஆசிரியர்கள், ஏனைய படைப்பிரிவின் இராணுவ அதிகாரிகள், மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.










## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நடவடிக்கையை அந்த வேளையில் அரசுத் தலைவர் முன்னெடுத்திருந்தால் நிச்சயமாக அந்தப் பதவி உயர்வு இளஞ்செழியனுக்கு கிடைத்திருக்கும்.

பதவி உயர்வு வழங்கும் நடவடிக்கை தாமதமாகி, அது கிடைக்காத காரணத்தினால் அவர் மேல் நீதிமன்ற நீதிபதி பதவியுடன் 61 வயதில் தமது நீதிச் சேவைப் பணியை முடித்துக் கொண்டு ஓய்வு பெற வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

அப்போது நிரப்பப்படாத அந்த நீதியரசர் இடங்களுக்கு இப்போது மூன்று பேரை நியமிப்பதற்கு அரசமைப்பு கவுன்ஸிலுக்கு ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கா பரிந்துரை செய்திருக்கிறார்.

பிரதம நீதியரசர் முர்து பெர்னாண்டோ சிபாரிசு செய்துள்ள கண்டி மேல் நீதிமன்ற நீதிபதி சுமுது பிரேமச் சந்திர, கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்ற நீதிபதி கே பிரியந்த பெர்னாண்டோ, திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிரேமசங்கர் ஆகிய மூவரையே இப்போது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் பதவிக்கு ஜனாதிபதி பரிந்துரைத்திருக்கின்றார். இந்தப் பதவிகளுக்கு சட்டமா அதிபர் பாரிந்த ரணசிங்க பரிந்துரைத்த பெயர்களை ஜனாதிபதி தமது பட்டியலில் சேர்க்கவில்லை என்று தெரிகிறது.

இந்த நீதியரசர்கள் நியமனம் குறித்து முடிவெடுப்பதற்காக அரசமைப்பு கவுன்ஸில் நாளை மறுதினம் புதன்கிழமை கூடவிருக்கின்றது.

\+ + +

இன்று கூடும் சுயாதீன தேர்தல் ஆணைக்குழு உள்ளூராட்சித் தேர்தல் பற்றிய அறிவிப்பை எந்த நேரத்திலும் வெளியிடலாமென்று எதிர்வு கூறப்படுகின்றது.

உத்தியோகபூர்வ அறிவித்தல் வெளியாகி 14 நாள்கள் தொடக்கம் 18 நாள்கள் வரையான காலப்பகுதியில் மூன்றரை நாள்களுக்கு வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்ய முடியும். அதாவது அறிவித்தல் வெளியாகி வேட்பு மனுக்களை இறுதி செய்ய கட்சிகளுக்கு ஆகக்கூடியது 17 நாள்களே கிடைக்கும்.

தமிழ்த் தேசிய கட்சிகள் இன்னும் தங்களுக்குள் தீர்க்கமான முடிவுகளை எடுக்கவில்லை. பேசிப் பேசிக் கலையும் வழமையான பல்லவியே தொடர்கின்றது. வழமைபோல வேட்பு மனு ஏற்பது பற்றிய திகதி அறிவிக்கப்பட்டதும், கடைசி நாள் வரை – கடைசி நேரம் வரை – கூடி, குழப்பியடித்து, குதர்க்கம் பண்ணும் வேலையைத்தான் இந்த முறையும் செய்யப் போகின்றார்கள் போலத் தோன்றுகின்றது. தமிழரசுக் கட்சி கூட ஆங்காங்கே மாவட்ட மட்டத்தில் கூடி, வாய்ப்பந்தல் பேச்சுக்களை நடத்துகின்றதே தவிர, மாவட்ட ரீதியில் கனகாத்திரமான – தீர்க்கமான – நடவடிக்கைகளையோ, முடிவுகளையோ எடுத்ததாகத் தெரியவில்லை.

இனி என்ன, கடைசி நேரத்தில் வேட்பு மனுக்களை அடித்துப் பிடித்துப் போட்டு, குளறுபடி பண்ணி, நிலைமையைக் குழப்புவதுதான் நடக்கும். திட்டமிட்டு நேரத்துடனேயே ஒழுங்குப்படுத்தி, அமைதியாக, ஆரவாரம் இன்றி செய்கின்ற பண்பு எப்போதுதான் வரப்போகின்றதோ தெரியவில்லை...!

## சி.வி.கே. அனுப்பிய கடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கூறப்படும் எந்தவொரு கடிதமும் கிடைக்கவில்லை என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இயங்கிய நான்கு கட்சிகளும் தமிழினத்தின் நலன் கருதி மீண்டும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், ஏனைய கட்சிகளின் தலைவர்களுக்குக் கோரிக்கை விடுத்திருந்தார்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி அவர் இந்தக் கோரிக்கையை விடுத்திருந்தார்

இந்தநிலையில், அவ்வாறான கடிதம் தமக்குக் கிடைக்கவில்லை எனவும், கடிதம் கிடைக்கப்பெற்றவுடன் அது தொடர்பில் கவனம் செலுத்தப்படும் எனவும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார்.

---

## தமிழ்த் தேசியக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

கட்சியின் பதில் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாவட்டக் கிளைகளைச் சந்தித்து வரும் சுமந்திரன், நேற்று ஞாயிற்றுக்கிழமை மன்னார் மாவட்டக் கிளையுடன் மன்னாரில் உள்ள அலுவலகத்தில் விசேட கலந்துரையாடலை நடத்தினார்.

இந்தக்கலந்துரையாடலைத்தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மன்னாரில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் கூட்டம் இடம்பெற்றது. கட்சியின் சகல அங்கத்தவர்களும் அந்தக் கூட்டத்தில் பங்குபற்றி இருந்தனர்.

மன்னார் மாவட்டத்தில் போட்டியிடவுள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகள் குறித்து ஆராய்ந்துள்ளோம். அந்தச் சபைகளில் வேட்பாளர்களை நியமிப்பது குறித்தும், குறிப்பாக வட்டார வேட்பாளர்கள், இரண்டாவது பட்டியல் வேட்பாளர்கள் நியமிப்பது குறித்து ஆராய்ந்துள்ளோம்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட வேட்பாளர்களில் நாட்டில் இல்லாதவர்கள் மற்றும் வேறு கட்சியில் இணைந்தவர்கள் குறித்தும், முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

எனினும், மிகவும் செல்வாக்கு உள்ளவர்களை வட்டார வேட்பாளராக நியமிப்பது என ஏற்கனவே கட்சி எடுத்த தீர்மானத்துடன் மன்னார் மாவட்டக் கிளையுடன் இணங்கியுள்ளனர்.

ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் எவ்விதத்தில் இந்தத் தேர்தலை அணுக முடியும் என்றும், தேர்தலின் பின்னர் வெவ்வேறு அணிகளாகப் போட்டியிட்டாலும் ஆட்சி நிர்வாகங்களை அமைக்கின்றபோது சேர்ந்து அமைக்கக்கூடிய வகையில், தேர்தலுக்கு முன்னர் ஒரு நிலைப்பாட்டை ஏற்படுத்தும் வகையில் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளோம்.

மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு சபைகளுக்கும் ஏற்ற வகையில் தீர்மானங்கள் எடுக்கப்படும். அனைவரினதும் கருத்துக்கள் உள்வாங்கப்பட்டுள்ளன.” – என்றார்.

---

## ‘அதானி வெளியேற்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

‘அதானி கிரீன் எனர்ஜி – ஸ்ரீலங்கா மீள் சக்தி பெருந்திட்டம், இலங்கைக்கு மட்டும் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டமல்ல. அது மேலதிக மின்சக்தியை இந்திய மின் சுற்றுக்கு ஏற்றுமதி செய்யும் நோக்கத்தைக் கொண்ட திட்டமாகும். அதற்காக இலங்கை – இந்திய மின் சுற்றுகள் இணைக்கப்பட இருந்தன.

இந்தப் பெருந்திட்ட மின் உற்பத்தி கட்டமைப்பு மற்றும் இந்திய சுற்றுடனான தொடர்பு இணைப்பு ஆகியவற்றை அமைக்கும் மற்றும் பராமரிக்கும், பாரிய பொறுப்புகளை அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம்தான் ஏற்று இருந்தது என்பதை மறவாதீர்கள். அதுதான் முழு திட்டம். அதைப் புரிந்துகொள்ள இன்றைய இலங்கை அரசு தவறி விட்டது.

அதானியை நீங்கள் வெளியேற்றவில்லை. அதானி கிரீன் எனர்ஜி நிறுவனம்தான் உங்களை விட்டு வெளியேறி விட்டது. இது இன்று இலங்கை நோக்கி வரக்கூடிய சர்வதேச முதலீட்டாளருக்கு எதிர்மறை செய்தியைக் கொண்டு சென்றும் விட்டது. இது தொடர்பில் இலங்கை நாடாளுமன்றத்தில் நான் உரையாற்றினேன்.

இலங்கை – இந்திய மின் சுற்று மூலம், இந்தியாவுக்கு ஏற்றுமதியாகும் இலங்கை மின்சாரம் இலங்கைக்குக் கொண்டு வரும் வருமானம் மூலம் இலங்கையில் மின்சாரக் கட்டணங்களைக் குறைக்க முடியும்.

எதிர்காலத்தின் மீது கண் வைத்து தீர்மானம் எடுக்கத் தவறி விட்டீர்கள். அதானியின், யூனிட் விலை தொடர்பில் பிரச்சினை இருக்கும்போது, அதைப் பேசி தீர்த்து இருக்கலாம்.

மறுபுறம், இந்தச் சம்பவம், இலங்கை நோக்கி வரக்கூடிய சர்வதேச முதலீட்டாளருக்கு எதிர்மறை செய்தியை கொண்டு சென்றும் விட்டது. சமீபத்தில், இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க ஐக்கிய அரபு அமீரகத்துக்குச் சென்று வந்தார். அங்கே என்ன நடந்தது? அங்கிருந்து ஏதாவது, முதலீடுகள் வருகின்றனவா? இலங்கைக்கு வெளிநாட்டு முதலீட்டாளர்கள், இந்திய பங்காளர்களுடன்தான் வருவார்கள். மத்திய கிழக்கு, ஐரோப்பிய நாடுகளில் இருந்து இலங்கையை நோக்கி முதலீட்டாளர்கள், இந்தியாவை “பைபாஸ்” செய்து வருவார்கள் என நினைக்கிறீர்களா?” – என்றுள்ளது.



# அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் மொட்டுக் கட்சிக்குள் கலந்துரையாடல்

## நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

அரசாங்கத்தின் செயற்பாடுகளால் நாட்டின் பொருளாதாரம் மற்றும் சமூகம் அரசியல் ரீதியாக வீழ்ச்சியை சந்தித்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக் ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்பொழுது ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்கள் வியாபித்துள்ளன எனவும் மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகவும் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எனவே இந்த விடயங்கள் தொடர்பில் சட்டத்தரணிகள் சங்கம் என்ற ரீதியில் எவ்வாறு எதிர்கொள்வது என்பது பற்றி கலந்துரையாடினோம் என நாமல் ராஜபக் ஷ குறிப்பிட்டார்.

கட்சியின் சட்டத்தரணிகள் சங்கத்தினர் உடனான சந்திப்பின் பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார்.

தொழிற்சங்க நடவடிக்கை, தொழில் முனைவோர், அரச அதிகாரிகள் ஆகியோருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் அரசியல் தலையீடு மற்றும் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் கட்சியாக எப்படி முகம் கொடுப்பது பற்றியும் கலந்தாலோசித்துள்ளோம் என்றும் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

“நீதி கட்டமைப்புக்குள் அரசியல் தலையீடு செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதனை கட்சி என்ற ரீதியில் தடுக்க வேண்டும். இந்த சுயாதீன சட்டத்தரணிகள் அலுவலகம் 1970ஆம் ஆண்டுகளில் காணப்பட்டது. பின்னர் அரசியல் தலையீடு காரணமாக நீக்கப்பட்டது. இன்று சட்ட மா அதிபருக்கு உள்ள அதிகாரம், அரசாங்கத்துக்கும் சட்ட மா அதிபர் திணைக்களத்திற்கும் உள்ள தெளிவின்மையை மறைத்து கொள்ள அரசாங்கம் முயற்சிக்கிறது. அந்த அதிகாரத்தை வைத்து தனக்கு ஏற்றாற் போல் நீதிமன்ற கட்டமைப்பையும் நீதியையும் கொண்டு செல்ல அரசாங்கம் பயன்படுத்த பார்க்கிறது. இவ்வாறு செய்வதால் இந்த நாட்டு மக்களுக்கும், கட்சிகளுக்கும், அரசாங்கத்துக்கும் நன்மை நடக்காது. இதன் இறுதி பலன் நாட்டுக்கு வருகைத் தரவுள்ள முதலீட்டாளர்கள் வர மாட்டார்கள். இன்றும் முதலீட்டாளர்கள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். சட்டத்தரணிகள் சங்கம் என்ற ரீதியில் இந்த விடயங்களுக்கு நாங்கள் கண்டனம் தெரிவிக்கிறோம்.” – என்றார்.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மின் விநியோகமும் பாதிப்புறலாம்

இலங்கையில் எரிபொருள், வலு, சக்தி சம்பந்தமான விவகாரங்கள் எப்போதும் பிரச்சுனைக்குரியனவாகவே இருக்கின்றன. எரிபொருள் விநியோக விவகாரம் இப்போது பற்றி எரியும் பிரச்சினையாக மாறிவிட்டது. இந்தச் சமயத்தில் மின் விநியோக நெருக்கடி தொடர்பான உள்வீட்டு விடயங்களை தென்னிலங்கை ஊடகம் ஒன்று பரபரப்பாக அம்பலப்படுத்தி இருக்கிறது.

அண்மையில் யாரும் எதிர்பாராத வகையில் நாடு முழுவதிலும் ஐந்து, ஆறு மணி நேர மின்வெட்டு நேர்ந்ததும், அதைத் தொடர்ந்து மின்விநியோகம் நெருக்கடிக்கு உள்ளானதும், இவற்றின் காரணமாக நாடு பெரும் பொருளாதார நஷ்டத்தை எதிர கொள்ளும் நிலைமை ஏற்பட்டதும் தெரிந்தவையே.

இந்த மின்வெட்டு நெருக்கடி தொடர்பில் பரபரப்பு தகவல்கள் இப்போது வெளியாகியிருக்கின்றன.

இலங்கை மின்சார சபையில் பல ஆண்டுகளாக நீடிக்கும் அலட்சியப்போக்கு, தவறான நிர்வாகம், அரசியல் தலையீடு ஆகியவற்றால் இந்த மோசமான நிலைமை ஏற்பட்டதாக இப்போது புலனாய்வு ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மின் விநியோகத்தைத் தடையின்றி உறுதிப்படுத்துதல், மின்வெட்டுக்கள் ஏற்படாமல் தவிர்த்தல், மின்விநியோக முறைமைகளை நெறிப்படுத்துதல் போன்ற விடயங்களை கையாளும் அதி உச்ச பொறுப்பான பதவி நிரப்பப்படாமல் இரண்டு வருடங்களாக வேண்டுமென்றே இழுத்தடிக்கப்பட்டு வருவதாக இப்போது தகவல் வெளியாகி உள்ளது.

நிலையாகப் பொருத்தப்பட்ட சூரிய மின்கலங்களில் இருந்து பெறப்படும் மின் விநியோகத்தை முறையான அனுமதி இன்றி - தன்னிஷ்டப்படி - இலங்கை மின்சார சபை வெட்டி புறக்கணிக்கின்ற நிலைமையும் ஏற்பட்டிருப்பதாக சுட்டிக் காட்டப்படுகின்றது.

தனியாரிடம்இருந்துஒப்பந்தம்மூலம்பெறப்படும் இந்த மின் விநியோகத்தை நினைத்தபடி இலங்கை மின்சார சபை வெட்ட முடியாது எனச் சுட்டிக்காட்டப்படுகிறது.

தனியாரிடம் இருந்து அவர்களுடன் செய்து கொள்ளப்பட்ட சட்டரீதியான ஒப்பந்தப்படி பெறுகின்ற சூரிய சக்தி மின்விநியோகத்தை அவர்களுக்குக் கூட அறிவிக்காமல், அமைச்சரவையின் அனுமதியோ அல்லது பொதுசேவை ஆணைக்குழுவின் முன் அனுமதியோ பெறாமல், தன்பாட்டில் சட்டவிரோதமாக வெட்டிப் புறமொதுக்கும் நடவடிக்கையை இலங்கை மின்சார சபை தொடர்ந்து முன்னெடுக்கும் அத்துமீறலும் தாராளமாக நடக்கின்றது.

இப்படி மின்விநியோக விடயங்களில் தொடர்ந்து நிர்வாக ரீதியாகக் காட்டப்படும் பல்வேறு தவறுகள், புறக்கணிப்புகள், அலட்சியங்கள், பொறுப்பற்ற போக்குகள் ஆகியவை குறித்து கொழும்பு ஊடகம் ஒன்று விலாவாரியாக தகவல்கள் வெளியிட்டு இருக்கின்றது.

நெருக்கடி தொடர்பான இந்த விடயங்களைத் தீர்மானிக்கின்ற உரிய அதிகாரி நியமிக்கப்படாமலேயே பொறுப்பின்றி பலரும் இவ்விடயங்களில் தீர்மானம் எடுத்துக் குழப்பத்தை ஏற்படுத்தி வருகின்றனர் என்பதை அந்த ஊடகச் செய்தி உறுதிப்படுத்தி உள்ளது.

நாட்டில் முறைமை மாற்றம் ஏற்படுத்தப் போவதாகக் கூறி அதிகாரத்துக்கு வந்த தேசிய மக்கள் சக்தி அரசும் கூட, இலங்கை மின்சார சபை போன்ற நாட்டின் மிக முக்கிய கட்டமைப்பை நிர்வகிப்பதற்கு நிபுணத்துவம் வாய்ந்த தலைமையை வழங்குவதாக தெரியவில்லை. எல்லாம் வாய்ச் சவடால் பேச்சாக இருக்கின்றனவே தவிர, நிபுணத்துவ ரீதியில் இத்தகைய விடயங்களை கையாளுகின்ற தலைமைத்துவம் இந்த அரசிடம் இருப்பதாகத் தெரியவில்லை என்பதே இந்த மின்சார நெருக்கடி தொடர்பில் இப்போது பலரதும் கணிப்பாக உள்ளது.

மின்சார சபைக்கு இத்தகைய மின் விநியோக நெருக்கடி ஏற்படும் என்று சபைக்குள் இருந்தே உரிய முறையில் எச்சரிக்கைகள், தகவல்கள் போதிய கால முன்னறிவிப்புடன் வழங்கப்பட்டும் அவை குறித்து உரிய கவனம் செலுத்தப்படவில்லை. அப்படி செலுத்தப்படாமை குறித்தும், அதற்கான பொறுப்பை கூறல் குறித்தும் நடவடிக்கை எடுக்கும் நிலையில் அரசியல் தலைமைத்துவம் இல்லை என்றும் விசனத்தோடு இப்போது சுட்டிக் காட்டப்படுகின்றது.

இந்தப் பொறுப்பற்ற செயல் போக்கு நிலைமை கவனிக்கப்படாமல் தொடருமானால் நாடு மின்விநியோக விடயத்தில் மேலும் மோசமான நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டி வரும் என்று இப்போதும் எச்சரிக்கப்படுகின்றது.

அச்சமயத்தில் நெருக்கடி தொடர்பில் குற்றம் சுமத்துவதற்கு இன்னொரு தடவை வானரப் படையைத்தான் - குரங்குகளைத் தான் - ஆளும் தரப்பு தேட வேண்டி இருக்கும்.





# கந்தளாய் சீனித் தொழிற்சாலைக்குரிய காணி பயிர்ச் செய்கைக்காக மக்களுக்கு கையளிப்பு

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை மாவட்ட கந்தளாய் சீனி தொழிற்சாலையில் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள தற்காலிக காணி ஒதுக்கீடு மக்களுக்காக வழங்கி வைக்கப்பட்டன .

ஜனாதிபதி அனநுரகுமார திஸநாயக்கவின் திட்டத்தின் பிரகாரம், கந்தளாய் சீனி தொழிற்சாலைக்கு சொந்தமான விவசாய நிலத்தை தற்காலிகமாக அப்பகுதி மக்களுக்கு பயிர்ச்செய்கைக்காக வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கந்தளாய் நகர மண்டபத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்ணசேகர, வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன, திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் டபிள்யூ.ஜி.எம். ஹேமந்த குமார ஆகியோர் கலந்து கொண்டு அனுமதி பத்திரங்களை வழங்கி வைத்தனர்.

இந்தத் தொழிற்சாலை பல வருட காலமாக செயலிழந்து காணப்பட்டமையால் இந்த நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டது.

இதில் தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி உட்பட பலரும் கலந்து கொண்டனர்.













# நாடளாவிய ரீதியில் வழமை போன்று எரிபொருள் விநியோகம் இடம்பெறுகிறது

## இலங்கை பெட்ரோலிய கூட்டுத்தாபனம் தெரிவிப்பு

நாடளாவிய ரீதியில் எரிபொருள் விநியோகம் வழமை போன்று முன்னெடுக்கப்படுவதாக இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே முன்பதிவு செய்யப்பட்ட எரிபொருள் தடையின்றி விநியோகிக்கப்படுவதாக கூட்டுத்தாபனத்தின் தலைவர் டி.ஏ. ராஜகருணா தெரிவித்துள்ளார்.

இன்று மற்றும் நாளைக்கு தேவையான எரிபொருளை எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்கள் சிலவற்றின் உரியமையாளர்கள், பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளதாக வெளியான தகவல்களை அடுத்து ஒருதரப்பினர் எரிபொருள் வரிசைகளில் நிற்பதை காணக்கூடியதாக இருந்தது.

எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கு வழங்கப்பட்டு வந்த 3 வீத கழிவுக் கொடுப்பனவை இரத்துச்செய்யும் நடைமுறை நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வந்தது.

நாட்டில் எரிபொருள் கையிருப்பு தொடர்பில் இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தினால் நேற்று காலை அறிக்கை வெளியிடப்பட்டது.

அதற்கமைய 66,188 மெட்ரிக் தொன் ஒட்டோ டீசலும் 9444 மெட்ரிக் தொன் சுப்பர் டீசலும் தற்போது கையிருப்பில் உள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

87180 மெட்ரிக் தொன் ஒக்டேன் 92 ரக பெட்ரோல், 13767 மெட்ரிக் தொன் ஒக்டேன் 95 ரக பெட்ரோல் கையிருப்பில் உள்ளதாக பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதனிடையே 7 நாள்களுக்குள் 4626 மெட்ரிக் டொன் ஒட்டோ டீசலும். 111 மெட்ரிக் தொன் லங்கா சுப்பர் டீசலும் 3806 மெட்ரிக் தொன் ஒக்டேன் 92 ரக பெட்ரோலும் 119 மெட்ரிக் தொன் ஒக்டேன் 95 ரக பெட்ரோலும் விநியோகிக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் மேலும் தெரிவித்துள்ளது.

# பொருளாதார நெருக்கடியினால் பாடசாலையில் இருந்து மாணவர்கள் இடைவிலகுவதைக் குறைக்க நடவடிக்கை

## அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தகவல்

(கி.வசந்தன்)

பொருளாதார நெருக்கடி காரணமாக பாடசாலையில் இருந்து இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கையை குறைக்கும் வகையில் அரசாங்கம் செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாக மகளிர், சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல்ராஜ் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் உள்ள சிறுவர் இல்லங்களை பார்வையிட்டமை தொடர்பில் நேற்றுக் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், சிறுவர் இல்லங்கள் என்பவற்றுக்கு வரவு – செலவுத் திட்டத்தில் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 500 மில்லியன் ரூபாய் இதன் வளங்களை அபிவிருத்தி செய்வதற்கும், மனிதவளத்தை மேம்படுத்துவதற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.



பெண் தலைமைத்துவ குடும்பங்களின் அபிவிருத்திக்காகவும், அவர்களுக்கான தொழில் வாய்ப்பை பெற்றுக் கொடுப்பதற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடி காரணமாக இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கையை குறைக்கும் வகையில் மாணவர்களுக்கான 6,000 ரூபா கொடுப்பனவு, சப்பாத்து வவுச்சர், பாடநூல், சீருடை, பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் பயன்படுத்தும் அங்கி என்பன வழங்கப்பட்டுள்ளன. இனி பாடசாலையில் இருந்து பொருளாதார சுமை காரணமாக இடை விலக முடியாத வகையில் அரசாங்கம் திட்டங்களை வகுத்துள்ளது. கல்வி அமைச்சர் என்ற வகையில் பிரதமருடனும் இது தொடர்பில் பேசியுள்ளோம்.

இடைவிலகளுக்கு பின் சிறுவயது திருமணங்கள், சிறு வயது விவாகரத்து தொடர்பிலும் கவனம் செலுத்தி அவர்களுக்கான ஒரு கல்வியை வழங்குவது தொர்பிலும் ஆலோசித்து வருகின்றோம் எனத் தெரிவித்தார்.

# கஞ்சாச் சுருட்டுடன் பௌத்த பிக்கு தியகலை பகுதியில் நேற்றுக் கைது

**(மஸ்கெலியா நிருபர்)**

1360 மில்லி கிராம் கஞ்சா மற்றும் 2.6 அங்குலம் நீளம் கொண்ட கஞ்சாச் சுருட்டுடன் பௌத்த பிக்கு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம்நேற்றுமாலை4மணிக்கு தியகலை பகுதியில் இடம் பெற்று உள்ளது.

ஹட்டன் பொலிஸார் வீதி தடை போட்டு சிவனடி பாத மலைக்கு யாத்திரி கர்கள் வருகை தந்த பஸ் ஒன்றைச் சோதனை இட்ட போது பௌத்த பிக்கு விடம் இருந்து 1360 மில்லி கிராம் கஞ்சாவும் கஞ்சாச் சுருட்டு ஒன்றும் கைப்பற்ற பட்டு உள்ளன.



இவ்வாறு கைது செய்ய பட்டவர் 27 வயது உடைய உபநந்த ஸ்ரீ போதி ருக்ஷா ராமய கிரிமெட்டிய பிக்கு மெதிரிகிரிய பகுதியைச் சேர்ந்தவர் எனவும், இவரை இன்று 3 ஆம் திகதி காலை ஹட்டன் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த உள்ளனர் எனவும் ஹட்டன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.



# மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழப்பு

மாத்தளை யட்டவத்த பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வாலவெல பகுதியில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந் துள்ளார்.

மூவர் வயலுக்கு சென்றுள்ள நிலையில், மிருகங்களிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக வைக்கப்பட்டிருந்த மின்கம்பியில் சிக்கி ஒருவர் உயிரி ழந்துள்ளார்.

3 பிள்ளைகளின் தந்தையான 42 வயதான ஒருவரே இவ்வாறு உயிரி ழந்துள்ளார் என பொலிஸார் தெரி வித்துள்ளனர். மேலதிக விசாரணை களை மாத்தளை யட்டவத்த பொலி ஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# சீரற்ற வானிலையால் 350 குடும்பங்கள் பாதிப்பு

சீரற்ற வானிலை காரணமாக 5 மாவட் டங்களில் 364 குடும்பங்களைச் சேர்ந்த 1,493 பேர் இதுவரை பாதிக்கப்பட்டுள்ள னர்.

அத்துடன், மேற்படி மாவட்டங்க ளின் 330 வீடுகள் பகுதியளவில் பாதிப் படைந்துள்ளன என அனர்த்த முகா மைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, யான் ஓயாவின் நீர் மட்டம் ஹொரவப்பொத்தான பகுதி யில் அதிகரித்து வருவதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.




# எரிபொருள் விநியோகத்துக்கான 3 சதவீத கழிவை இரத்து செய்யும் தீர்மானத்தில் மாற்றம் இல்லை

## அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவிப்பு

எரிபொருள் விநியோகத்தர்களுக்கு வழங்கப்படும் 3 சதவீத கழிவை இரத்து செய்யும் தீர்மானத்தில் எந்தவொரு மாற்றமும் இல்லை என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இதனிடையே, நாட்டில் நாளொன்றுக்குத் தேவைப்படும் அளவை விடவும் இரண்டு மடங்கு எரிபொருள் நேற்று முன்தினம் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு வழங்கப்பட்டதாக இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனம் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில், நேற்றும் பல எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் வழமை போன்று இயங்கியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனத்திற்கும் எரிபொருள் விநியோகத்தர்களுக்கும் இடையிலான தற்போதைய விநியோக ஒப்பந்தத்தின்படி, எரிபொருள் நிரப்பு நிலையத்தில் விற்பனை செய்யப்படும் ஒவ்வொரு லீற்றர் எரிபொருளுக்கும் வழங்கப்படும் மூன்று சதவீத தள்ளுபடியை இரத்து செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

இதனையடுத்து,3 சதவீத கழிவு கொடுப்பனவு பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் வரையில் புதிய எரிபொருள் முன்பதிவுகளை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என இலங்கை கனியவள விநியோகத்தர்கள் சங்கம் தீர்மானித்திருந்தது.

இந்தநிலையில், எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு அருகே நீண்ட வரிசை காணப்பட்டது.

இருப்பினும், இந்த நிலைமை நேற்று ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.



# பெப்ரவரியில் இரண்டு லட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை

கடந்த மாதத்தில் மாத்திரம் 232,341 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் கடந்த மாதம் வரை 485,102 பேர் நாட்டுக்கு வருகைத் தந்துள்ளனர்.

அவர்களில் இந்தியாவிலிருந்து 34,006 பேரும், ரஷ்யாவில் இருந்து 29,241 பேரும், பிரித்தானியாவில் இருந்து 24,830 பேரும் நாட்டுக்கு வருகைத்தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

# மீனவர் பிரச்சினைக்கு மத்திய, மாநில அரசுகள் இணைந்து நிரந்தரமான தீர்வு காண வேண்டும்

## ஆளுநர் ஆர்.என். ரவி தெரிவிப்பு





மீனவர் பிரச்சினைக்கு மத்திய, மாநில அரசுகள் இணைந்து நிரந்தர தீர்வு காண வேண்டும் என ஆளுநர் ஆர்.என். ரவி தெரிவித்துள்ளார்.

தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, இராமேஸ்வரம் செம்மமடம் பகுதியில் மனோலயா மனநல காப்பகக் கட்டடத்தை திறந்து வைப்பதற்காக நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை விமானம் மூலம் மதுரை சென்றார். அங்கிருந்து கார் மூலம் இராமநாதபுரத்தில் உள்ள அரசினர் விருந்தினர் மாளிகைக்கு சென்ற ஆளுநரை மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் கலோன் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்.

இராமநாதபுரத்திலிருந்து இராமேஸ்வரம் செல்லும் வழியில், மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண வலியுறுத்தி தங்கச்சிமடத்தில் மூன்றாவது நாளாக நடைபெற்ற மீனவர்களின் காத்திருப்பு போராட்ட பந்தலுக்கு தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி சென்றார். ஆளுநரை மீனவ பிரதிநிதிகள் பொன்னாடை அணிவித்து வரவேற்றனர்.

மீனவர்கள் தமிழக ஆளுநர் ஆர். என். ரவியிடம், தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு, அரசுகள் நிரந்தர தீர்வு காண வேண்டும். இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட படகுகளையும், கைது செய்யப்பட்ட மீனவர்கள், தண்டனை அனுபவித்து வரும் மீனவர்களை நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும், என கோரிக்கைகளை முன்வைத்தனர்.

காத்திருப்பு பந்தலில் அமர்ந்திருந்த மீனவர்களின் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறிய ஆளுநர் ஆர். என். ரவி, மீனவர் பிரச்சினை குறித்து உடனடியாக தான் அரசின் கவனத்திற்கு கொண்டு செல்வதாக உறுதியளித்தார்.

இது குறித்து ஆளுநர் ஆர்.என். ரவி, தனது எக்ஸ் பக்க பதிவில் குறிப்பிடுகையில்,

“இராமேசுவரத்துக்கு நான் சென்றிருந்தபோது, துன்பத்தில் உழலும் நமது மீனவ சமுதாயத்தைச் சேர்ந்த சகோதர, சகோதரிகளைச் சந்தித்தேன். அவர்களின் நிலை மீது நான் ஆழ்ந்த இரக்கம் கொள்கிறேன். 1974 ஆம் ஆண்டு மத்தியிலும், மாநிலத்திலும் இருந்த அரசுகள், கச்சத்தீவு சுற்றுவட்டார கடல் பகுதியை அநியாய ஒப்பந்தம் மூலம் கொடுத்து பெரும் பாவத்தை மீனவர்களுக்கு இழைத்தன.

அன்றிலிருந்து இன்று வரை நமது மீனவ சமூகத்தினர் தொடர்ந்து இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். இலங்கை அரசால் அவர்கள் கைது செய்யப்பட்டு, அவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்படுகின்றன. இந்த நீடித்த பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு வேண்டும். இதற்கு மத்திய, மாநில அரசுகள் இணைந்து செயல்பட வேண்டும். இந்தப் பிரச்சினையை அரசியலாக்குவதற்குப் பதிலாகவும், மத்திய அரசைக் குறை கூறுவதற்குப் பதிலாகவும், ஆக்கபூர்வமான அணுகுமுறையை மாநில அரசு மேற்கொண்டால் அது பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணீரைத் துடைப்பதற்கு பெரிதும் உதவும்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

# த.வெ.க. பெயரில் விஷமக் கருத்துகளை திணிக்க முயற்சி: என்.ஆனந்த் எச்சரிக்கை



த.வெ.கவின் கொள்கை பரப்பு மற்றும் செய்தித் தொடர்பு நிர்வாகிகள் தெரிவிக்கும் கருத்துக்களே தங்களது நிலைப்பாடு என்றும் த.வெ.க. பெயரில் விஷமக் கருத்துகளைத் திணிக்கும் முயற்சி வன்மையாகக் கண்டிக்கத்தக்கது எனவும் அக்கட்சியின் பொதுச் செயலாளர் என்.ஆனந்த் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில்,

“தொலைக்காட்சி, செய்தி ஊடகங்களில் நடைபெறும் விவாத நிகழ்ச்சிகளில் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவரால் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்ட கொள்கை பரப்பு மற்றும் செய்தித் தொடர்பு நிர்வாகிகள் தெரிவிக்கும் கருத்துகள் மட்டுமே கழகத்தின் கருத்து மற்றும் நிலைப்பாடாகும்.

கட்சியின் பெயரை அறிவித்து, கழகத்தில் உறுப்பினர் சேர்க்கை, மாணவர்களுக்குப் பாராட்டுச் சான்று மற்றும் ஊக்கத் தொகை வழங்கியது, வெற்றிக் கொள்கைத் திருவிழா, கழக ஆண்டு விழா எனத் தமிழக வெற்றிக் கழகம் வீறுநடை போட்டு, மக்களின் பேராதரவுடன் மிகப் பெரிய அளவில் வளர்ந்து வருகிறது.

இதனைப் பொறுத்துக்கொள்ள முடியாத சில அரசியல் கட்சிகள், தங்கள் ஆதரவாளர்களை, பத்திரிகையாளர் மற்றும் ஊடகவியலாளர்கள் என்ற போர்வையில், தமிழக வெற்றிக் கழகத்தின் ஆதரவாளர்களாகச் சித்திரித்து ஊடக விவாதங்களில் பங்கேற்கச் செய்து, திட்டமிட்ட சில விஷமக் கருத்துகளைத் திணிக்கும் பணியைச் செய்து வருகின்றன. இது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

ஊடக விவாதங்களில் பங்கேற்பதற்காக, தமிழக வெற்றிக் கழகத் தலைவரால் அல்லது அவரின் ஒப்புதலோடு தலைமை நிலையச் செயலகத்தால் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படாதவர்கள், ஊடக விவாதங்களில் கலந்துகொண்டு தெரிவிக்கும் கருத்துகள், தமிழக வெற்றிக் கழகத்தின் அதிகாரப்பூர்வக் கருத்தோ அல்லது நிலைப்பாடோ அல்ல என்பதைக் கழகத் தலைவரின் ஒப்புதலோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே அதிகாரபூர்வமற்றவர்கள் கழகத்தின் பெயரைப் பயன்படுத்தி, ஊடக விவாதங்களில் கலந்துகொண்டு தெரிவிக்கும் கருத்து மற்றும் நிலைப்பாடுகளைத் தமிழக மக்களும் கழகத் தோழர்களும் நம்பவோ, ஏற்றுக்கொள்ளவோ வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.” என்று குறிப்பிட்டுள்ளார்.




# உக்ரைன் ஆதரவாளர்கள் அமெரிக்காவில் போராட்டம்

அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளில் உக்ரைன் ஆதரவாளர்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

டொனால்ட் ட்ரம்ப் மற்றும் வொலோடிமிர் ஷெலென்ஸ்கி இடையே நடைபெற்ற சந்திப்பு கடும் வாக்குவாதத்தில் நிறைவுபெற்றது.

கடுமையான வாக்குவாதத்தின் பின் வெள்ளை மாளிகையிலிருந்து உக்ரைன் ஜனாதிபதி வெளியேற்றப்பட்டார்.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து தற்போது அமெரிக்காவின் பல பகுதிகளில் உக்ரைன் ஆதரவாளர்கள் எதிர்ப்பு போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.






# அமெரிக்காவில் ஆங்கிலம் உத்தியோகபூர்வ மொழியானது



அமெரிக்க வரலாற்றில் முதல் முறையாக ஆங்கிலத்தை உத்தியோகபூர்வ மொழியாக டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

ஆங்கில மொழியை முதல் மொழியாகப் பேசுவோரில் மூன்றில் இரண்டு பங்கினர் அமெரிக்காவில் வசித்து வருகின்றனர்.

அமெரிக்காவில் பேசப்படும் ஆங்கில மொழி அமெரிக்க ஆங்கிலம் என்று கூறப்படுகிறது.

350 இற்கும் மேற்பட்ட மொழிகளைப் பேசுவோர் அமெரிக்காவில் வசித்து வருகின்றனர்.

தற்போது அந்த நாட்டு ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உத்தியோகபூர்வ மொழியாக ஆங்கிலத்தை அறிவித்து நிர்வாக உத்தரவில் கையெழுத்திட்டார்.



# பொலிவியாவில் பஸ் விபத்து: 37 பேர் பலி; 30 பேர் காயம்

பொலிவியாவின் உயுனி நகரில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 37 பேர் உயிரிழந்துள்ளனர். 30 பேர் காயமடைந்துள்ளனர்.

இரண்டு பயணிகள் பஸ்கள் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

லத்தீன் அமெரிக்காவின் மிகப் பெரிய விழாக்களில் ஒன்றான ஒருரோ கொண்டாட்டம் நடைபெறும் மேற்கு நகரமான ஒருரோவிற்கு பயணித்த பஸ் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.




# பாகிஸ்தான் – சீனா இடையில் விண்வெளி ஒப்பந்தம் கைச்சாத்து

பாகிஸ்தான் நாட்டை சேர்ந்தவரை விண்வெளிக்கு அனுப்புவதற்கு சீனா திட்டமிட்டுள்ளது.

அதன்படி சீனாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே இது தொடர்பான ஒப்பந்தம் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது

அதன்படி சீனாவின் விண்வெளி ஆய்வு நிறுவனங்களில் ஒன்றான ஊஆளுயு பாகிஸ்தானிலிருந்து ஒருவரைத் தேர்ந்தெடுத்து, அவருக்கு முறையான பயிற்சிகளை வழங்கி, விண்வெளிக்கு அனுப்பி வைக்கத் தீர்மானித்துள்ளது.

இதற்கு பாகிஸ்தானின் விண்வெளி ஆய்வு நிறுவனமான SUPARCO உதவியாக இருக்குமென தெரிவித்துள்ளது.

அண்மையில் சீனாவுக்கு விஜயம் மேற்கொண்ட பாகிஸ்தான் பிரதமருடன் இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டு பின்னர் தீர்மானம் எடுக்கப்பட்டதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சில ஆண்டுகளாக பாகிஸ்தானின் செயற்கைக்கோள்களை சீனா விண்வெளிக்கு அனுப்பியது.

இந்நிலையில், சீனாவின் விண்வெளி ஆய்வு நிறுவனத்திற்கு பாகிஸ்தான் நாட்டை சேர்ந்தவரை இணைத்துக்கொள்வது சர்வதேச அளவில் கவனத்தை பெற்றுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 03.03.2025




இன்றைய நாள் பரபரப்பாகக் காணப்படும். இன்று நீங்கள் ஆன்மீகத்தில் ஈடுபட்டு ஆறுதல் பெறுவீர்கள்.

உங்கள் செயல்திறனுக்கு நல்ல பெயரெடுப்பீர்கள். உங்கள் பணிகளை மேற்கொள்ளும்போது உங்கள் தனித்திறமையை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையிடம் உண்மையான அன்பை பகிர்ந்து கொள்வீர்கள். உங்களின் நேர்மையான அணுகுமுறை காரணமாக இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். பணம் அதிக அளவில் சேர்க்க இயலும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

கடவுள் அருளால் இன்று உங்கள் ஆரோக்கியம் ஸ்திரமாக இருக்கும்.




இன்று உங்களுக்கு சாதகமான நன்மையான பலன்கள் கிடைக்கும். இன்று நீங்கள் பரபரப்பாக காணப்படுவீர்கள். இன்று உங்கள் செயல்களை புத்திசாலித்தனமாக ஆற்ற வேண்டும்.

உங்களுள் மறைந்திருக்கும் திறமை-களை வெளிக்கொணர்வதன் மூலம் திருப்தி காண்பீர்கள். உங்கள் பணிகளை முடிப்பதற்கு இது பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் வெளிப் படையாகப் பழகுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வைப் பராமரிக்க இயலும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். புதிய முதலீடு போன்ற முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

இன்று பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்களை நீங்கள் உற்சாகமாக வைத்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலை காணப்படும். நீங்கள் பிறரை மகிழ்விக்க முயற்சி செய்வீர்கள். உங்கள விதியை நீங்கள் எற்றுக் கொள்வதன் மூலம் சிறப்பாகவும் நம்பிக்கையுடனும் உணர்வீர்கள். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம்நன்மை பெறலாம்.

இன்று அதிக பணிகள் காணப்படும்.அது உங்களுக்கு கவலை அளிக்கும். உங்கள் மேலதிகாரிகளுடன் சில பிரச்சினைகளை சந்திக்க நேரும்.

மகிழ்ச்சியற்ற உணர்வு காரணமாக உறவில் திருப்தியின்மை காணப்படும். நீங்கள் உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுவீர்கள்.

நிதிநிலைமை சிறிது ஏமாற்றத்தை அளிக்கும். பாதகமான விளைவுகள் ஏற்படாமல் இருக்க பண விஷயத்தில் முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவேண்டியது அவசியம்.




இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல. எல்லா விஷயத்திலும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். நீங்கள் அதிகமாக உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனைத் தவிர்க்கத் திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும்.

பணியிடத்தில் சக பணியாளர்களால் சில தொல்லைகள் ஏற்படும். பணிகளை மேற்கொள்ளும் போது பொறுமை அவசியம்.

தொடர்பாடலில் உள்ள இடைவெளி காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். இருவரும் எதிரெதிரான கருத்துக்களைக் கொண்டிருப்பீர்கள்.

பணப்புழக்கம் சிறிது ஏமாற்றம் அளிக்கும். அதிகரிக்கும் செலவுகள் காரணமாக கடன் வாங்க நேரலாம்.

பதற்றம் காரணமாக கால் வலி ஏற்படலாம். தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆரோக்கியத்தை சிறப்பாக பராமரிக்கலாம்.




இன்று உங்கள் நண்பர்கள் மற்றும் பரிச்சயமானவர்களின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகளால் உங்கள் நண்பர்களை மகிழ்விப்பீர்கள். இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனளிக்கும்.

பணியில் உங்கள் செயல்திறன் உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும். பணியில் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையிடம் உங்கள் மீது நல அபிப்பிராயம் ஏற்படும்.

உங்களின் சம்பாதிக்கும் ஆற்றல் உயரும். நிதி நிலைமை செழிப்பாக இருக்கும்.

உங்களின் சந்தோஷமான மனநிலை காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




இன்று சுமூகமான பலன்கள் கிடைக்கும். சில முக்கிய முடிவுகளை நீங்கள் எடுப்பீர்கள். அனைத்து விதத்திலும் மகிழ்ச்சி காணப்படும். உங்கள் செயல்களில் தன்னம்பிக்கை காணப்படும்.

உங்கள் திறமையின் மீதிருக்கும் நம்பிக்கை காரணமாக கடினமான பணிகளையும் நீங்கள் விரைவாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள். இதன் மூலம் உங்கள் துணையின் நம்பிக்கைக்கு ஆளாவீர்கள்.

பூர்வீகச் சொத்து மூலம் பண வரவுக்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் சேமிப்பில் கணிசமான தொகை சேரும்.

நீங்கள் ஆற்றலுடன் காணப்படுவீர்கள். உடல் மற்றும் மன ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று சுமூகமான பலன்கள் கிடைக்கும். சில முக்கிய முடிவுகளை நீங்கள் எடுப்பீர்கள். அனைத்து விதத்திலும் மகிழ்ச்சி காணப்படும். உங்கள் செயல்களில் தன்னம்பிக்கை காணப்படும்.

உங்கள் திறமையின் மீதிருக்கும் நம்பிக்கை காரணமாக கடினமான பணிகளையும் நீங்கள் விரைவாக முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள். இதன் மூலம் உங்கள் துணையின் நம்பிக்கைக்கு ஆளாவீர்கள்.

பூர்வீகச் சொத்து மூலம் பண வரவுக்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் சேமிப்பில் கணிசமான தொகை சேரும்.

நீங்கள் ஆற்றலுடன் காணப்படுவீர்கள். உடல் மற்றும் மன ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்றைய நாள் ஏற்ற இறக்கத்துடன் காணப்படும். உங்கள் மனதை அமைதியாக வைத்திருக்க வேண்டியது அவசியம். நீங்கள் பல சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும்.

அதிக பணிகள் காரணமாக பணியில் மும்மரமாக இருப்பீர்கள். என்றாலும் உங்கள் திறமை காரணமாக உங்கள் பணிகளை செவ்வனே ஆற்றுவீர்கள்.

உங்கள் துணையிடம் எதிர்மறை உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். இத்தகைய உணர்வுகளை தவ-ிர்ப்பது நல்லது.

இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். பணத்தைக் கவனமாகக் கையாள வேண்டும்.

அதிக வேலை காரணமாக சோர்வு காணப்படும். தலை வலி ஏற்படுவதற்கான வாய்ப்பும் உள்ளது. இதனால் அசௌகரியமாக உணர்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 03.03.2025




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் வளர்ச்சி குறித்த முக்கிய முடிவுகள் எடுக்க இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள். புதிய மனிதர்களை சந்தித்து புதிய அனுபவம் பெறுவீர்கள். புதிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

பணியிடத்தில் முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும். உங்கள் திறமைக்கு மேலதிகாரிகளின் பாராட்டுக் கிடைக்கும்.

உங்கள் இனிமையான அணுகுமுறை உங்கள் துணையை மகிழ்விக்கும். உங்கள் துணையின் உணர்வை புரிந்து கொண்டு அதன்படி நடந்து கொள்வீர்கள்.

பண வரவு மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருக்கும். கையிலிருக்கும் பணம் கொண்டு உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள்.




இன்று எதிர்பார்க்கும் பலன்கள் கிடைக்காது. அதிர்ஷ்டத்தை விட சுய முயற்சியை சார்ந்து செயல் பட வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

அதிகப் பணிகள் காரணமாக பணியில் மும்மரமாக இருப்பீர்கள். ஓய்வெடுக்கச் சிறிது நேரமே கிடைக்கும். பணிகளை திட்டமிட்டு அதன்படி ஆற்றவும்.

நீங்கள் சிறிது பதற்றத்துடன் காணப்படுவீர்கள். இது உங்கள் துணையுடனான உறவை பாதிக்கும். எதையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள்.

நிதி நிலைமை மகிழ்ச்சி கரமாக இருக்காது. அதிகரிக்கும் செலவுகள் உங்களுக்கு கவலை அளிக்கும்.

அமைதியின்மை காரணமாக மனதில் பதற்றம் காணப்படும். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.




இன்று சாதகமான பலன்கள் கிடைக்க உகந்த நாள் அல்ல. இன்றைய சவால்களைத் திறமையுடன் சமாளிக்க பொறுமையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

நீங்கள் கவனமுடன் பணியாற்ற வேண்டும். சில தடைகள் காணப்படும். அதனால் நேரம் கூட செலவாகும். சுமூகமான சூழ்நிலை காண திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் தனிப்பட்ட பிரச்சினை ஒன்று குறித்து உங்கள் துணையை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள். கருத்து வேறுபாடு காரணமாக உபயோகமற்ற பேச்சுக் காணப்படும். எனவே கருத்து வேறுபாட்டை நீக்கி பரஸ்பரம் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் குறைவாக இருக்கும். அதிக செலவுகள் சுமையாக இருக்கும்.




இன்று எதிர்பார்க்கும் பலன்கள் கிடைக்காது. அதிர்ஷ்டத்தை விட சுய முயற்சியை சார்ந்து செயல் பட வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

அதிகப் பணிகள் காரணமாக பணியில் மும்மரமாக இருப்பீர்கள். ஓய்வெடுக்கச் சிறிது நேரமே கிடைக்கும். பணிகளை திட்டமிட்டு அதன்படி ஆற்றவும்.

நீங்கள் சிறிது பதற்றத்துடன் காணப்படுவீர்கள். இது உங்கள் துணையுடனான உறவை பாதிக்கும். எதையும் லேசாக எடுத்துக் கொள்ளுங்கள்.

நிதி நிலைமை மகிழ்ச்சி கரமாக இருக்காது. அதிகரிக்கும் செலவுகள் உங்களுக்கு கவலை அளிக்கும்.

அமைதியின்மை காரணமாக மனதில் பதற்றம் காணப்படும். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

# வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரியாக இன்ஸ்பெக்டர் ஜெயதிலக






(கி.வசந்தன்)

ஓமந்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெயத்திலக வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரியாக கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் தற்போது நாடு முழுவதும் பொலிஸ் அதிகாரிகள் பலருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக வவுனியா மாவட்டத்தில் கடந்த காலத்தில் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய நிர்வாக பிரிவு பொறுப்பதிகாரி, வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி, ஓமந்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட பல பதவி நிலைகளை வகித்து வந்த சிரேஷ்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெயத்திலக வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் செற்படும் வவுனியா மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரியாகக் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.